டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

agridoctor.in | 24.12.2024 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 155 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# உலகின் உணவு உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுக்கும்

## மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் தகவல்

புது தில்லி, டிச.23

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண் துறையின் பங்களிப்பு 18 சதவீதமாக உள்ளது. குறிப்பாக கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில், நாட்டின் வேளாண் துறை பிற நாடுகளைக் காட்டிலும் வலுவானதாக இருந்தது என்பதை உலக நாடுகள் அறிந்து கொண்டுள்ளன. இந்தத் துறையை வலுப்படுத்த மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற் கொண்டு



வருகிறது. இந்தியாவை உலகின் உணவு உற்பத்தி மையமாக உருவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு வருவதாக மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலன் மற்றும் ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

புனேயில் நேற்று கோகலே அரசியல் மற்றும் பொருளாதார நிறுவனத்தில் நடைபெற்ற 70ஆவது ஆண்டு கருத்தரங்கில் உரையாற்றிய சவுகான், ஆராய்ச்சியாளர்களின் பணி ஆய்வகத்துடன் மட்டும் நின்றுவிடாமல், விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். நாட்டின் கலாச்சாரம் மற்றும் நாகரிகம் மிகவும் பழமையானது. வேளாண் துறையும் இதில் இணைந்துள்ளது. குறிப்பாக, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, உலகம் முழுவதையும் ஒரே குடும்பமாக கருதி, இந்தியா வழிநடத்தி வருவதாக அவர் கூறினார்.

நதிகள் இணைப்புத் திட்டத்தை 2024-ம் ஆண்டு டிசம்பர் 25-ம் தேதி அன்று பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார். நாட்டின் பல்வேறு பகுதிகள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படு வதாகவும், சில பகுதிகள் வறட்சி போன்ற சூழ்நிலைகளால் பாதிக்கப்படுவதாகவும் சௌகான் கூறினார். இத்தகைய சவால்களை சமாளிக்கும் வகையில், சிறப்பு நதிகள் இணைப்புத் திட்டம் விரைவில் தொடங்கப்படும் என்று அவர் கூறினார். அதிக மழை பெறும் பகுதிகள் மற்றும் வறட்சியை எதிர்கொள்ளும் பகுதிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடையும்.

குறைந்த நீரில் அதிக பாசனம் செய்யக்கூடிய தொழில் நுட்பத்தை நாம் உருவாக்க வேண்டும் என்றும் வேளாண் அமைச்சர் கூறினார். வேளாண் துறையை ஊக்குவிக்க உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்திய சவுகான், கடந்த ஆண்டு விவசாயிகளுக்கு 1.94 மெட்ரிக் டன் மானியம் வழங்கியதாக கூறினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைபிடித்து மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு விருது

அரியலூர், டிச.23

அரியலூர் மாவட்டத்தில் நெல் சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைபிடித்து மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது' ரூபாய் ஐந்து இலட்சம் மற்றும் ரூபாய் மூன்றாயிரத்து ஐந்நூறு மதிப்புடைய வெள்ளிப் பதக்கம் சிறப்பு பரிசாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிர் விளைச்சல் போட்டிக்கு விவசாயி செலுத்த வேண்டிய பதிவுக்கட்டணம் ரூ.150/- ஆகும். விவசாயிகள் பதிவு செய்து, பதிவு கட்டணத்திற்கான இரசீதினை பெற்றுக்கொள்ளலாம்.

மாநில அளவிலான இப்போட்டியில் கலந்து கொள்ள இந்நிதியாண்டின் மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் (31.03.25) பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்திட வேண்டும். திருந்திய நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்பவர் ஏப்ரல் 15 ஆம் தேதிக்குள் (15.04.25) அறுவடை செய்ய வேண்டும்.

போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் போட்டிக்கான படிவத்தினை பூர்த்தி செய்து, பதிவு கட்டணத்துடன் சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடம் சமர்பிக்க வேண்டும். விண்ணப்பத்துடன் நெல் பயிரிடப்பட்டுள்ள பரப்பின் சான்று ஆவணங்களான சிட்டா மற்றும் அடங்கல் ஆகியவை கட்டாயமாக இணைக்கப்பட வேண்டும். பயிர் விளைச்சல் போட்டியில் போட்டி யிடும் விவசாயி, குறைந்தபட்சம் 2 ஏக்கர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி செய்பவராக இருத்தல் வேண்டும். மேலும், தனியார் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் திருந்திய நெல் சாகுபடி செய்த முன்னோடி விவசாயியாகவும் இருக்க வேண்டும்.

இப்போட்டியில், நில உரிமைதாரர்கள் மற்றும் குத்தகை தாரர்களும் கலந்து கொள்ள தகுதியடையவர்கள் ஆவர். பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள், அரசால் அங்கீகரிக்கப்பட்ட நெல் இரகங்களை மட்டுமே (Notified varieties) பயிர் செய்திருக்க வேண்டும். போட்டியில் பங்கு பெறும் விவசாயி களின் வயலில் குறைந்த பட்சம் 50 சென்ட் அளவில் பயிர் அறுவடை மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு முறை பரிசு பெறும் விவசாயி அடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் போட்டியில் கலந்து கொள்ள இயலாது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

விவசாயி கடைபிடிக்கும் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் (System of Rice Intensification) தொடர்பான ஆவணங் களை முறைப்படி பராமரித்து வர வேண்டும். இப்போட்டிக்கான பதிவிற்கு பிறகு, அறுவடை நிலத்தில் போட்டிக்கான விபரங்களுடன் பலகை வைத்திட வேண்டும்.

இது தொடர்பான விபரங்களுக்கு, சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயனடையுமாறு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர், பொ.இரத்தினசாமி கேட்டுக் கொண்டார்.

# தேசிய உழவர்கள் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி



செங்கல்பட்டு, டிச.23

செங்கல்பட்டு மாவட்டம், கடுக்கலூர் ஊராட்சி, எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஜவஹர்லால், உதவி பேராசிரியர்கள் ராஜசேகரன், முகமது இக்ஷானுல்லா, நவீன் குமார், கணேஷ்மூர்த்தி ஆகியோரின் தலைமையில் இடைக்கழிநாடு பேரூராட்சியில் கிராமப்புற பணி அனுபவத் திட்டத்தில் தங்கி இருக்கும் ரோஜர்ஸ் குழுவை சேர்ந்த 11 மாணவர்கள் நேற்று (23ம் தேதி) தேசிய உழவர்கள் தினத்தை முன்னிட்டு இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் முத்துக் குமரன், ஏரி சங்கத் தலைவர் குப்பன், விவசாய சங்க தலைவர், வெடால், கடுக்கலூர், ஒத்திவிலாக்கம் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் ஊர் பொதுமக்கள் உற்சாகமாக பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் தமிழக அரசு விவசாயிகளுக்கு வழங்கும் நலத் திட்டங்கள் மற்றும் செயலிகள் குறித்து உதவி வேளாண்மை அலுவலரும் மாணவர்களும் சிறப்புரையாற்றி இந்நிகழ்ச்சியை பயனுள்ளதாக செய்து நடத்தினர்.

**தலைக்கவசம் உயிர்க்கவசம்**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 23.12.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 40 | 44 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 45 | 48 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 55 | 60 | 57A | உருளை(ஊட்டி) | 28 | 48 |
| 2 | வெண்டை | 35 | 40 | 58 | மேரக்காய் | 20 | 25 |
| 3 | தக்காளி (நாடு) | 20 | 25 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 20 | 23 | 60 | கேரட் | 55 | 60 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 70 | 80 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 64 |
| 6 | புடலை | 35 | 40 | 62 | நூல்கோல் | 35 | 40 |
| 7 | பீர்க்கன் | 45 | 50 | 63 | டர்னிப் | 30 | 38 |
| 8 | சுரைக்காய் | 30 | 34 | 64 | மு.கோஸ் | 20 | 26 |
| 9 | பாகற்காய் | 35 | 40 | 65 | மு.கோஸ்(கலர்) | 0 | 0 |
| 10 | கொத்தவரை | 35 | 40 | 66 | காளிபிளவர் | 40 | 45 |
| 11 | பூசணி | 14 | 16 | 67 | பட்டாணி | 110 | 120 |
| 12 | அரசாணி | 16 | 20 | 68 | பூண்டு | 200 | 300 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 40 | 69 | இஞ்சி | 46 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 40 | 50 | 70 | புருக்கோலின் | 160 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 56 | 60 | 71 | பென்னி பீன்ஸ் | 75 | 80 |
| 16 | பெ.வெங்காயம் | 34 | 37 | 72 | குடமிளகாய் | 52 | 56 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 40 | 73 | ஊட்டி அவரை | 100 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 60 | 65 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 160 | 170 | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 58 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 68 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 43 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 50 | 58 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 25 | 30 |
| 28 | கறிவேப்பிலை | 75 | 78 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 35 | 40 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 50 | 54 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 35 | 40 | 96 | நேந்திரன் | 65 | 70 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 40 | 45 | 97 | செவ்வாழை | 70 | 78 |
| 47 | கண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 10 | 12 | 99 | நார்த்தங்காய் | 45 | 48 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 30 | 35 | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 78 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 40 | 45 | | | | |
| 55A | துவரை | 0 | 0 | | | | |

# தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் வாழை திருவிழா மற்றும் விவசாயிகள் தினம்



திருச்சி, டிச.23

தேசிய வாழை ஆராய்ச்சி மையம் (NRCB), திருச்சிராப்பள்ளி, வாழை திருவிழா மற்றும் விவசாயிகள் தினத்தை 23.12.24ல் கொண்டாடியது. நிகழ்ச்சியில் சௌதரி சரண் சிங் அவர்களின் பிறந்த நாளையும், விவசாயிகளின் அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தையும் மகிழ்ச்சியுடன் நினைவுகூரப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு தலைமை விருந்தினராக வருகை தந்த முனைவர் சஞ்சய் குமார் சிங், துணை பொது இயக்குநர் (தோட்டக்கலை அறிவியல்), இந்திய வேளாண்மை ஆராய்ச்சி குழுமம், புது டெல்லி, PMFME திட்டத்தின் கீழ் (ரூபாய் 2.50 கோடி) நிதியுதவி செய்யப்பட்ட பொது பதனிடுதல் மையத்தையும் பயிற்சியாளர்களுக்கான விடுதியையும் (ரூபாய் 1.75 கோடி) திறந்து வைத்தார். மேலும் தனது உரையில், வாழைத் துறையின் ஆராய்ச்சியும் முன்னேற்றமும் மகத்துவம் வாய்ந்தவை என குறிப்பிட்டார். இந்தியாவில் புவிசார் குறியீடு பெற்ற வாழை வகைகள் இருப்பினும், அவற்றின் முழு திறனை செயல்படுத்தவில்லை என்றும், விவசாயிகள் வளர்த்து வரும் வகைகளை PPV&FRAவின் (தாவர வகை பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் உரிமைகள் அதிகாரம்) கீழ் பதிவு செய்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். வாழை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள், வாழை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நடைமுறைகளை மேம்படுத்தியதற்காக தேசிய வாழை ஆராய்ச்சி மையத்திற்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். அவர், மின்-வணிக இணையதளம் மற்றும் International Society for Banana and Plantains சங்கத்தை தொடக்கி வைத்தார். மேலும் இவ்விழாவில் SCSP திட்டத்தின் கீழ் திசு வளர்ப்பு வாழை கன்றுகள் பட்டியலின மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் முனைவர் இரா.செல்வராஜன், தானியங்கி மற்றும் உணரிகள் (Sensor) அடிப்படையிலான பாசன முறைகள் வாழை உற்பத்தியை அதிகரித்து, இடுபொருட்களை குறைக்க உதவுவதாக கூறினார். வாழைத் தண்டு சாறு தயாரிப்பு மற்றும் வாழை இலை உற்பத்தி போன்ற சிறு தொழில்முனைவுகளை ஊக்குவிக்க வேண்டிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். பொது பதனிடுதல் மையத்தின் வசதிகளை விவசாயிகள் பயன்படுத்தி அவர்களது வருமானத்தை உயர்த்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மேலும், பாரம்பரிய வாழை வகைகளுக்கான திசு வளர்ப்பு கன்றுகளை வணிகரீதியாக தயாரிக்க திட்டமிட்டுள்ளதாக அறிவித்தார். இந்த ஆண்டில், நுமரன் மற்றும் மனோரஞ்சிதம் ஆகிய விவசாய வகைகள் PPV&FRAயில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ISROவுடன் இணைந்து புதிய ஆராய்ச்சி திட்டங்களை தொடங்க இருப்பதாக தெரிவித்தார்.

இந்த விழாவில், விவசாயிகள், தொழில்முனைவோர்கள், வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் மற்றும் பிற பங்குதாரர்கள் உள்பட சுமார் 600 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் வாழை உற்பத்தி மற்றும் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள், Farmers Extension Linkages குறித்த கருத்தரங்குகள் இடம்பெற்றன. விவசாயிகளுக்கு Pisang Lilin மற்றும் வாழையில் மாவு பூச்சி மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்கான சிறப்பு விரிவாக்க வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களாக முனைவர் சி.வன்னியராஜன், முதல்வர், ADAC & RI, TNAU, திருச்சி, முனைவர் ஜே.ராஜ் சங்கம், முதல்வர், HC & RI, TNAU, பெரியகுளம் மற்றும் முனைவர் ஜே.சுரேஷ், முதல்வர், HC & RI (W), TNAU, திருச்சி பங்கேற்றனர்.

முனைவர் J.பூரணி, முதன்மை விஞ்ஞானி, ICAR-NRCB, திருச்சிராப்பள்ளி, வரவேற்பு உரையுடன் நிகழ்ச்சி துவங்கி, முனைவர். சி. கற்பகம், முதன்மை விஞ்ஞானி, ICAR-NRCB, திருச்சிராப்பள்ளி நன்றி உரையுடன் நிறைவடைந்தது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# வரும் 26ம் தேதி மல்பரியில் மகசூலை அதிகரிக்கும் தொழில் நுட்பங்கள் பயிற்சி

திருச்சி, டிச.23

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மல்பரியில் நவீன இரகங்கள் பூச்சி நோய் மேலாண்மை மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றிய ஒரு நாள் நிலையப் பயிற்சி 26.12.24 வியாழக்கிழமை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் மல்பரியில் நவீன ரகங்கள், சாகுபடி தொழில்நுட்பங்கள் நீர், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை,




அங்கக முறையில் மல்பரி சாகுபடி, சொட்டுநீர் பாசனத்தில் மல்பரி சாகுபடி, போன்ற தலைப்புகளில் பயிற்சி நடத்தப்பட உள்ளது. பயிற்சி நேரம் காலை 9 .30 மணி முதல் 4 .00 மணி வரை பயிற்சி குறித்த மேலும் விவரங்களுக்கு பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுனர் முனைவர் ஷீபா ஜாஸ்மினை அலுவலக வேலை நேரத்தில் காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரை தொலைபேசி எண் 81225 86689/ 0431 2962854 மூலம் தொடர்பு கொள்ளலாம்.

ஆர்வமுள்ள விவசாயிகள் முன்பதிவு செய்து கலந்து கொண்டு பயனடைய வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜா பாபு (91717 17832) அழைப்பு விடுத்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உயிர் உரங்கள் உயிரியல் கட்டுப்பாட்டு மருந்துகள் உளுந்து நுண்ணூட்டத்துடன் ஊக்கத்தொகை பெற்று உளுந்து விதைக்கலாம்



தஞ்சாவூர், டிச.23

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் வட்டாரத்தில் ராபி பருவத்தில் 700 எக்டர் வரை தனி பயிராகவோ வரப்பு பயிராகவோ தென்னையில் ஊடுபயிராகவோ உளுந்து சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மதுக்கூர் வட்டாரத்தில் டிசம்பர் முதல் பிப்ரவரி வரை அதிக அளவில் உளுந்து சாகுபடி விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறு குறு விவசாயிகளை உளுந்து சாகுபடி ஊக்குவிக்கும் நோக்கில் ஒரு ஏக்கருக்கு தேவையான எட்டு கிலோ உளுந்து வம்பன் 8 சான்று விதை வாடல் நோயை கட்டுப்படுத்தும் உயிரியல் கட்டுப்பாட்டு மருந்துகள் சூடோமோனஸ்/டி.விரிடி 3 கிலோ மற்றும் யூரியா மற்றும் சூப்பர் உர பயன்பாட்டை குறைக்க திரவ உயிர் உரம் ஒரு லிட்டர் மற்றும் உளுந்தில் அதிக பூக்கள் வைக்கவும் காய் பிடிக்கவும் தேவையான பயறு நுண்ணூட்டம் இரண்டு கிலோ அடங்கிய தொகுப்பு ரூபாய் 2066 மதிப்புடையது 50% மானியத்தில் வழங்கப்படுகிறது. இத்துடன் விவசாயிகளுக்கு மீள ரூபாய் 500 ஊக்கத்தொகையாக பின்னேற்பு மானியத்தில் விவசாயிகள் வங்கி கணக்கிலும் வரவு வைக்கப்படுகிறது.

பொதுத்தலைப்பில் 120 விவசாயிகளுக்கும் எஸ் சி பி தலைப்பில் 38 விவசாயிகளுக்கும் தற்போது மதுக்கூர் வேளாண் விரிவாக்கம் மையத்தில் அனைத்து இடு பொருட்களும் இருப்பு வைக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் மதுக்கூர் வட்டாரத்தின் அனைத்து கிராம விவசாயிகளுக்கும் சாகுபடி ஊக்குவிக்கும் நோக்கில் வழங்கப்பட்டு வருகிறது. தேவைப்படும் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு உளுந்து சாகுபடிக்கான அடங்கல், ஆதார் நகல், கம்ப்யூட்டர் சிட்டா மற்றும் வங்கி கணக்கு நகலுடன் எஸ்சிபி விவசாயிகள் ஜாதி சான்று நகலுடன் வேளாண் உதவி அலுவலரை அணுகி பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. மதுக்கூர் வேளாண் விரிவாக்க மையத்தில் பணமில்லா பரிவர்த்தனை மட்டுமே மேற்கொள்ளப்படுவதால் விவசாயிகள் ஆன்லைன் மூலம் தொகை செலுத்தி ஒத்துழைப்பு வழங்கிட மதுக்கூர் வேளாண் உதவி இயக்குனர் கேட்டுக்கொள்கிறார்.

சிறப்பு மாற்றுப் பயிர் சாகுபடி ஊக்குவிப்பு திட்டத்தின் மூலம் மாநில வேளாண் வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து திட்டம் செயல்படுத்தப் படுகிறது. விதை முதல் அறுவடை வரை உளுந்து சாகுபடி மேற் கொள்ளும் விவசாயிக்கு தேவையான அனைத்து இடுபொருட் களுடன் திட்டம் செயல்படுத்தப்படுவதால் ஒரு ஏக்கர் வீதம் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து விவசாயிகள் உளுந்து சாகுபடி மேற் கொண்டு குறைந்த சாகுபடி செலவில் அதிக மகசூல் பெற வேண்டும் என வேளாண் உதவி இயக்குனர் மதுக்கூர் தெரிவித்துள்ளார்.



# உயிரியல் முறையில் பூச்சி மேலாண்மையில் டிரைக்கோ கிராமா கைலோனிஸ் முட்டை ஒட்டுண்ணியின் பங்கு




பூச்சிகளின் தீவிரம் நாளுக்கு நாள் பயிர்களில் அதிகமாக இருந்து வருகிறது. ஒரு காலத்தில் மைனர் பெஸ்ட் (MINOR PEST) (மாவுபூச்சி, வெள்ளை ஈ) இன்று MAJOR PEST-யாக மாறிவிட்டது. அதிகமாக பூச்சி மருந்துகள் தெளிப்பதால் அதனுடைய எச்சம் தாய்பாலில் கூட படிந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதை எல்லாமே தவிர்க்க உயிரியல் முறையில் பூச்சிகளை கட்டுப்படுத்த உயிரியல் பூச்சிக்கொல்லிகள் ஒட்டுண்ணிகள் இயற்கை எதிரிகள் இவற்றைக் கொண்டு பயிர் பாதுகாப்பு செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த பதிவில் டிரைக்கோ கிராமா கைலோனிஸ் (TRICHO GRAMMA CHILONIS) யின் செயல்பாடுகளை பார்ப்போம்.

**டிரைக்கோகிராமா கைலோனிஸ்**

இது முட்டை ஒட்டுண்ணி. இது குளவி இனத்தை சார்ந்தது. இந்த ஒட்டுண்ணி எறும்பை விட சிறியதாக இருக்கும். இக்குளவிகள் சேதம் விளைவிக்கும் புழுவின் முட்டை பருவத்திலே அழித்து விடும்.

**செயல்பாடு என்ன தெரியுமா?**

பயிரை தாக்கும் புழுவின் தாய் பூச்சி இடும் முட்டைகளை இக்குளவிகள் தேடி சென்று அம்முட்டைகளுக்குள் தனது முட்டையை உட்செலுத்தி விடுகின்றன. இதனால் (தீமை செய்யும் புழுக்கள்) அந்த புழுக்களின் முட்டைகள் கருக்கள் அழிக்கப்பட்டு விடுகின்றன. அதேநேரத்தில் அப்புழுக்களின் முட்டைகளில் இந்த முட்டை ஒட்டுண்ணியின் சந்ததிகள் வளரும். முட்டைகளை துளையிட்டு வெளிவரும், அப்போது காணப்படும் தீமை செய்யும் பூச்சிகளை தேடி அவற்றின் முட்டைகளை அழிக்கும். குறிப்பிட்ட நாளுக்கு பின் இந்த பூச்சிகள் அந்த வயலில் அதிகமாக இருக்கும். இவற்றை அழிக்காமல் இருக்க ரசாயன மருந்துகளை தெளிக்க க்கூடாது.

**இந்த ஒட்டுண்ணியால் கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள் எவை?**

நெல் இலைச்சுருட்டுபுழு , கரும்பில் இடைக்கணு புழு (INTERN-ODE BORER ) பருத்தி காய்புழுக்கள், காய்கறி பழங்கள் மற்றும் பயறு வகை காய்புழுக்கள். பயன்படுத்தும் முறை எந்த எந்த பயிருக்கு எவ்வளவு சி.சி கட்ட வேண்டும்.?

1) நெல் – நடவு செய்த 37 மற்றும் 44 மற்றும் 51வது நாளில் 2.சி.சி / எக்கருக்கு

2) கரும்பு – நடவு செய்த 4 மாதத்திலிருந்து 15 நாட்களுக்கு ஒருமுறை 1 சிசி வீதம் / எக்கருக்கு

3) பருத்தி – விதைப்பு செய்த 45 நாட்களிலிருந்து 15 நாள் இடை வெளியில் 3 முறை 3 சிசி / எக்கர்

4) காய்கறிகள், பழங்கள், பயறு வகைகள் – பூ பூக்கும் பருவத்தில் 7 நாட்கள் இடைவெளியில் 3 சிசி / எக்கர் என இலை களின் அடிபாகத்தில் முட்டை ஓட்டுண்ணி அட்டைகள் கட்ட வேண்டும்.

**எப்படி இந்த அட்டைகளை பயன்படுத்துவது?**

1) பாதிப்பு தென்படும் இடங்களில் இலையின் அடிப்பகுதியில் காலை / மாலை நேரத்தில் கட்டவேண்டும்.

2) இவற்றை பாதுகாப்பாக வைத்திருக்க குளிர்பதன பெட்டியை பயன்படுத்த வேண்டும். இல்லாத பட்சத்தில் ஆய்வகத்தில் வாங்கிய 3 நாட்களுக்குள் கட்ட வேண்டும்.

3) முட்டை ஓட்டுண்ணி விடும் முன்பும் பின்பும் அதாவது 7நாட்களுக்கு இரசாயன மருந்து தெளிக்க க்கூடாது.

4) முட்டை ஓட்டுண்ணி இருக்கும் அட்டையை அழுத்தி கையால் பிடிக்க கூடாது. கட்டும் போது முட்டை இல்லாத வெற்றிட பகுதியை கையால் பிடிக்க வேண்டும்.

5) முட்டை ஓட்டுண்ணி யை கட்டும் போது பேப்பர் கப் பில் உள்ளே வைத்து கட்டினால் அது மழை, வெயிலுக்கு பாதுகாப்பாக இந்த பேப்பர் கப்களில் இருக்கும். செடியின் அடிப் பாகத்தில் கட்டும் போது பாதுகாப்பாக PAPER CUP களை பயன்படுத்தலாம்.

**நன்மைகள்**

1) இந்த அட்டையை பயன்படுத்துவதால் பூச்சிக் கொல்லியின் பயன்பாடு குறைவதுடன் கணிசமாக பூச்சியை கட்டுப் படுத்தக்கூடிய செலவும் குறையும்.

2) சுற்றுப்புற சூழல் பாதிக்கப்படாது.

3) இயற்கையான முறையில் விளைந்த பொருட்களாக மாறும்.

எனவே வாய்ப்புள்ள இடங்களில் இந்த முட்டை ஓட்டுண்ணியை வாங்கி பயன்படுத்திடவும் தேவைக்கு அருகேயுள்ள வேளாண்மை அலுவலகத்தை நாடவும்.

இயற்கை காப்போம் மாசுபடாத மகசூலை பெறுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



Rithvik Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# உளுந்து பயிரில் அதிக மகசூல் பெற விதை தரம் அறிந்து விதைப்பு செய்ய வேண்டும்

புதுக்கோட்டை, டிச.23

புதுக்கோட்டை மாவட்டத்தில் உளுந்து தைப்பட்டத்தில் சம்பா நெல் அறுவடைக்குப்பின் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அதிக மகசூல் பெற தரமான விதைகளைப் பயன்படுத்துவதன் மூலம் குறைந்த விதை அளவு, சீரான மற்றும் வேகமான முளைப்புத்திறன், சீரான பயிர் எண்ணிக்கை, ஒருமித்த பூக்கும் தன்மை,சீரான முதிர்ச்சிப்பருவம், குறைவான பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் 15 முதல் 20 சதவிகிதம் வரைஅதிகவிளைச்சல் ஆகியநன்மையைப் பெறலாம்.

இதற்கு விவசாயிகள் சான்று பெற்ற விதைகளையே வாங்கி பயன்படுத்த வேண்டும். சான்று பெற்ற விதைகள் அனைத்தும் விதைச்சான்று அலுவலர்களால் வயல் ஆய்வில் வயல் தரம் உறுதி செய்யப்பட்டு பின்னர் விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை பரிசோதனை செய்து முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற இரகக் கலவன் பிறபயிர் விதைகள் அனுமதிக்கப் பட்ட அளவு கொண்டுள்ளதா? என்பதை உறுதி செய்த பின்னர் விநியோகிக்கப்படுவதால் சான்று பெற்ற விதைகளைப் பயன்படுத்தி தேவையான பயிர் எண்ணிக்கையினை பராமரிக்கலாம்.

விவசாயிகள் தங்களது கைவசம் உள்ள உளுந்து விதைகளை விதைக்கும் சூழ்நிலையில் விதைக்க உள்ள விதையில் முளைப்புத் திறன் குறைந்தபட்சம் 75 விழுக்காடு புறத்தூய்மை 98 விழுக்காடு அதிகபட்ச ஈரப்பதம் 9 விழுக்காடுக்குள் உள்ளதா? என்பதை அறிந்து விதைப்பு செய்தால் உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் பெற வாய்புள்ளது. எனவே விவசாயிகள் தங்களது கைவசம் உள்ள உளுந்து விதைகளின் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிறரக கலவன் பிற பயிர் விதையளவு அறிய புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நம்பர் 30, இராமலிங்கம் தெரு, திருக்கோகர்ணம் என்ற முகவரியில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் ஒரு கிலோ விதையினை துணிப்பையில் இட்டு மேலும் ஈரப் பதம் அறிய தனியே 100 கிராம் அளவு விதைகளை காற்று புகாத பாலிதீன் பைகளில் இட்டு பயிர் இரகம் தேவையான ஆய்வு விபரங் களை குறிப்பிட்டு மாதிரிகளைக் கொடுத்து, மாதிரிக்கு ரூ80/–மட்டும் செலுத்தி விதைகளை பரிசோதனை செய்து கொள்ளலாம். பரிசோதனை முடிவுகளை உங்கள் இருப்பிட முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும் என புதுக்கோட்டை விதைபரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் மா.செல்வம் தெரிவித்தார்.

# கலைஞரின் அனைத்து கிராம வேளாண் ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்ட ராபி பருவ விவசாயிகள் பயிற்சி

சேலம், டிச.23

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம் வேளாண்மைத் துறையின் கீழ் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் மூலம் 2024-2025-ம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்மாளப்பட்டி கிராமத்தில் 23.12.24 அன்று விவசாயிகளுக்கு ராபி பருவ விவசாயிகள் பயிற்சி நடத்தப்பட்டது.



உதவி வேளாண்மை அலுவலர் சின்னதுரை, கலந்து கொண்டு அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பனமரத்துப்பட்டி வேளாண்மை உதவி இயக்குநர் சாகுல்அமீத், பேசுகையில் விவசாயிகளுக்கு உலக விவசாயிகள் தின வாழ்த்துகளை தெரிவித்து, வேளாண் விரிவாக்க மையத்தில் பணமில்லா பரிவர்த்தனை செயல்படுத்தபடுவதாக விவசாயி களுக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் வேளாண்மை துறை மூலம் செயல்படும் திட்டங்கள் மானியங்கள் குறித்து விளக்கம் அளித்தார். மேலும் இப்பயிற்சியில் விவசாயிகளுக்கு இயற்கையான உயிர் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் மண் வளம் பாது காப்பதோடு இராசயன உரங்களின் செலவை குறைத்து அதிக மகசூல் கிடைக்கும் என கூறினார்.




இதில் தோட்டக்கலை துறை மூலம் டேவிட், தோட்டக்கலை உதவி அலுவலர் கலந்து கொண்டு தோட்டக்கலை துறை மூலம் செயல்படும் திட்டங்கள் மானியங்கள் குறித்து விளக்கம் அளித்தார்.

இப்பயிற்சியில் டஃபே நிறுவனம் மூலம் மோகன் குமாரன் கலந்து கொண்டு வேளாண் உழவு கருவிகளை வாடகை திட்டம் மூலம் இயந்திரமாக்குதல் தொழில்நுட்பம் பற்றி பேசினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுமித்ரா கலந்து கொண்டு அட்மா திட்டம் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றி விளக்கம் அளித்தார். கம்மாளப்பட்டி கிராம விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சந்தன மர வளர்ப்பு மும்முனை துணைச் செடி மற்றும் மேலாண்மை தொழில்நுட்பம்

சந்தன செடி துணைச்செடி உதவியில்லாமல் வருவதில்லை. மேலும், துணைச் செடிகள் மூலம் சந்தன செடியை மையமாக கொண்டு புதர் அமைப்பதால் சந்தன காட்டில் இயல்பாக வளரும் சூழல் ஏற்படுத்தமுடியும். இதன் மூலம் சந்தன காட்டில் வளரும் சூழ்நிலையை உருவாக்கி வேகமாக சந்தன செடியை வளர்க்க முடியும்.

**மும்முனைத் தொடர் துணைச்செடி**

1. முதல் நிலை துணைச் செடி – பொன்னாங்கன்னிக்கீரை
2. இரண்டாம் நிலை துணைச்செடி – அகத்தி மற்றும் துவரை
3. நிலையான துணைச் செடி – சவுக்கு

**சந்தன செடியை சுற்றி புதர் அமைத்தல்**

▲ நடவு குழியில் சந்தன நாற்றை முதல் நிலை துணைச் செடியான பொன்னாங்கன்னிக்கீரையுடன் சேர்த்து நடுவில் நட வேண்டும்

▲ இரண்டாம் நிலை துணைச்செடியான அகத்தியை குழியின் கிழக்கு மேற்கு திசைகளிலும், துவரையை தெற்கு வடக்கு திசைகளிலும் நட வேண்டும்.

▲ நிலையான துணைச் செடியான சவுக்கை சந்தன நாற்றிலிருந்து ஒரு அடி இடைவெளியில் எதாவது ஒரு திசையில் நடவு செய்ய வேண்டும்.

**துணைச்செடி கவாத்து மேலாண்மை**

சந்தன வளர்ப்பில் முதல் ஆறு மாதத்திற்கு துணைச் செடியுடன் வளர்த்த பின்பு மெதுவாக துணைச் செடியின் உயரத்தை குறைத்து சந்தன செடிக்கு முழு சூரிய வெளிச்சம் கிடைக்கும் வகையில் துணைச் செடிகளை கவாத்து முறை செயல்படுத்தவேண்டும். இதன்படி, துணைச் செடிகளை கழுத்தளவு உயரத்திற்கு மேல் கவாத்து செய்து சந்தன செடி நன்கு வளர வழிவகை செய்ய வேண்டும்.

**கவாத்து செய்தல்**

சந்தன மரங்களின் ஆரம்ப வளர்ச்சி கட்டத்தில் பக்க கிளைகள் அதிகம் தோன்றும். ஆகவே கிளைகளை மரங்களின் வளர்த்திக் கேற்ப அவ்வப்போது கவாத்து செய்து தண்டுப்பகுதி கிளைகளற்று நேராக வளரும் வண்ணம் பராமரிக்க வேண்டும்.

கவாத்தானது மரத்தின் அடிப்பகுதியில் பத்து கிளைகள் இருக்கும் பட்சத்தில் இரண்டு கிளைகளை மட்டுமே கவாத்து செய்ய வேண்டும். அதேபோல், இரண்டு முதல் மூன்று மாத இடைவெளியில், அடிப்பகுதியில் உள்ள இரண்டு கிளைகளை முறையாக கவாத்து செய்து கொண்டு வரவேண்டும். இதன்படி, பத்து முதல் பனிரெண்டு அடிவரை இம்முறையை பின்பற்றவேண்டும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயி களை கேட்டுக்கொண்டுள்ளார்.

# நெல் மற்றும் நிலக்கடலை விதைபண்ணையில் ஆய்வு



கோயம்புத்தூர், டிச.23

தொண்டமுத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திரு.டி.சக்திவேல் அவர்களின் செய்தி குறிப்பு.

கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் வட்டாரம், இக்கரை பூலுவாம்பட்டி வருவாய் கிராமத்தில் அமைக்கப்பட்ட நெல் மற்றும் நிலக்கடலை விதைபண்ணையை மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் - மாநில திட்டம் விஜய கல்பனா, வேளாண்மை அலுவலர் முகம்மது தாரிக், விதை சான்று அலுவலர் செல்லம்மாள் மற்றும் உதவி விதை அலுவலர் சுப்ரமணியன் ஆய்வு செய்தனர்.

கோ 55 இரகம் நெல் ஆதார நிலை 2 விதை பண்ணை அமைக்கப்பட்டிருந்தது. 85 நாள் வயதுடைய விதை பண்ணை நல்ல நிலையில் உள்ளது. 115 நாள் வயதுடைய இந்த இரகம் ஒரு மாத முடிவில் அறுவடை செய்யப்படவுள்ளது. ஏக்கருக்கு 2.5 டன் மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது. கதிரி லேபாக்சி 1812 நிலக்கடலை இரகம் ஆதார நிலை 1 விதைப்பண்ணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 90 நாள் வயதுடைய இரகம் 40 நாட்களில் அறுவடை எதிர்பார்க்கப்படுகிறது. ஏக்கருக்கு 1 டன் மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது.

விதை பண்ணை விவசாயிகளிடம் நன்கு சுத்தம் செய்யப்பட்ட விதைகளை வழங்கிட கேட்டுக்கொள்ளப்பட்டது.

# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்



நாமக்கல், டிச,23

நாமக்கல், கொல்லிமலையில் உள்ள கிராமங்களில், கொல்லிமலை பெரிய பகுதி பல்நோக்கு சங்கத்துடன் இணைந்து இப்கோ நானோ உரங்கள் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி அருள்மணி, நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்கள் பற்றி விளக்கினார். மேலும், மிளகுமற்றும் காபி பயிர்களில் ஊட்டச்சத்து குறைபாட்டை தவிர்க்க ஒரு லிட்டர் நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்களை 150 லிட்டர் நீரில் கலந்து வேர் நேர்த்தி செய்யலாம் என்றும், அல்லது 5 மி.லி நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்களை ஒரு லிட்டர் நீரில் கலந்து வருடத்திற்கு மூன்று முறை இலைவழி தெளிக்கலாம் என்றும் கூறினார். மேலும், நானோ உரங்கள் வாங்கினால் இப்கோவின் விவசாயிகளுக்கான விபத்துக் காப்பீடு திட்டமான சங்கட ஹரன் பீமாயோஜனாவின் மூலம் ரூ.2,00,000 வரை காப்பீடு பெறலாம் என்றார். இந்நிகழ்ச்சியில் 350க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர்.



# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு

திருவண்ணாமலை, டிச.23

திருவண்ணாமலை மாவட்டத்தில் கன மழை பெய்து இருப்பதால் விவசாயிகள் தங்களிடம் உள்ள நெல் விதைகளை விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதை களை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதைபரிசோதனை செய்தபின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்பு திறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத்தன்மை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்துகொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரக கலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியனவற்றை பரிசோதனை செய்து அதன்பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர்இ இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ,80/- வீதம் விதைப்பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சோளத்தில் தேன் ஒழுகல் நோயும் அதன் மேலாண்மை முறைகளும்



சோளம் (Sorghum) என்பது ஆப்பிரிக்காவை பூர்விகமாகக் கொண்ட ஒரு முக்கிய தானிய வகை யாகும். இது தானிய வகைகளில் சிறந்த நார்ச்சத்து மற்றும் ஊட்டச் சத்து கொண்டதாகும். தமிழ்நாட்டில் இது பொதுவாக உணவுக்கும் மேற் பரப்புத் தாவரமாகவும் பயிரிடப்படுகிறது. சோளம் இந்தியாவின் பல பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தை வழங்கும் பயிராகும். சோளத்தில் உண்டாகும் பலவகை நோய் களில் தேன் ஒழுகல் நோய் முக்கியமான ஒன்றாகக் கருதப்படு கிறது. இந்நோய் எர்காட் நோய் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தியாவில் உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், கர்நாடகா, மகாராஷ் டிரா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் அதிகமாகக் காணப்படு கிறது. தமிழ்நாட்டில் சோளம் பயிரிடப்படும் பகுதிகளில் பெரும் பாலும் இந்நோய்க் காணப்படுகிறது.1967-68 ம் ஆண்டுகளில் ஒரு எபிடெமிக் வகை நோயாகத் தோன்றி பெரும் சேதத்தை விளைவித்தது.

### நோய்க்காரணி

இந்நோய் கிளாவிசெப்ஸ்சொர்க்ஹி என்ற ஒரு வகைப் பூசணத் தால் உண்டாகிறது. இந்நோய்க் காரணி பாலினக் கலவையால் தோற்றுவிக்கும் வித்து உறுப்புகளிலிருந்து வெளிவரும் ஆஸ்கோஸ்போர்ஸ் எனப்படும் உள் வித்துக்களினால் நோய்த் தோற்றுவிக்கப்படுகிறது. பூசண இழைகள் வெண்மை நிறமாகவும், குறுக்குச் சுவர்களைக் கொண்டும் நன்கு கிளைத்துப் படர்ந்து வளரக் கூடியது.

### நோயின் அறிகுறிகள்

இந்நோயின் அறிகுறிகள் பூக்கும் தருணத்தில் மாத்திரமே வெளித்தெரிகின்றன. நோய்த் தாக்கியக் கதிரிலுள்ள பூக்களி லிருந்து, இளம்பழுப்பு நிறத்தில் தேன் போன்ற இனிப்பான திரவம், சிறுசிறுத் துளிகளாகக் கசிந்துக் கொண்டேயிருக்கும். ஒரு கதிரில் சில பூக்கள் அல்லது அநேகப் பூக்களிலிருந்து இவ்வாறு திரவம் கசியும். சில நாட்களில் இத்திரவம் கெட்டியாகிக் காய்ந்து, அடர் பழுப்பு நிறத்தில் தென்படும்.

இது போன்ற தாக்கப்பட்ட பகுதியிலுள்ள பூக்களிலிருந்து தானியங்களுக்குப் பதிலாக, கெட்டியான மரத்துண்டுப் போன்ற கரும்பழுப்பு நிற இழை முடிச்சுகள் தோன்றும். எர்காட் என்று அழைக்கப்படும் இந்த இழை முடிச்சுகள் 0.5 - 1.0 X 0.1 - 0.2 செ.மீ அளவிலும், நீண்டக் கொம்புப் போன்ற அமைப்பிலும் தென்படும். இந்த இழை முடிச்சுகளில் எர்கோடாக்சின், எர்கோட்டாமின், எர்கோமெட்ரின் போன்றப் பல நச்சுப் பொருட்கள் அடங்கியுள்ளன. இவை கால்நடைகளின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியவை.



நோய்த் தாக்கப்பட்ட பூக்களிலிருந்து தேன் போன்ற திரவம் கசிதல்

**நோய்ப் பரவும் விதமும் பரவுவதற்கு ஏற்ற காலநிலைகளும்**

நிலத்திலும் விதைகளுடனும் கலந்துக் காணப்படும் இழை முடிச்சுக்கள் நோய்த் தோன்றுவதற்கும் ஒரு பகுதியிலிருந்து, வேறுப் பகுதிகளுக்கு பரவுவதற்கும் முக்கியக் காரணமாகும்.

இழை முடிச்சுக்கள் முளைத்து, உள் வித்துக்களைத் தோற்றுவிக்க 30- 45 நாட்களாகும். அந்த சமயத்தில் பயிரும் பூக்கும் நிலைக்கு வருவதால் உள்வித்துக்கள் தோன்றியவுடன், பூக்களைத் தாக்கி நோயைத் தோற்றுவிக்கிறது.

காற்றில் ஈரப்பதம் அதிகமாகக் காணப்படும் போது நோய் வேகமாகப் பரவுகிறது. உள் வித்துக்கள் முதலில் நோயைத் தோற்றுவிக்கின்றன. கோனிடியா வித்துக்கள் இரண்டாம் பட்சமாக நோய்ப் பரவக் காரணமாகின்றன.

பூக்கும் பருவத்தில் காலை மற்றும் மாலை நேரங்களில் அதிகளவு ஈரப்பதம், மப்பும் மந்தாரமுமான காலநிலை, குறைந்த வெளிச்சம் தொடர்ந்து மழைத்தூறல் போன்றவை நோய் வேகமாகப் பரவ ஏதுவாகிறது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

**நோய்க் கட்டுப்பாடு**

**உழவியல் முறைகள்**

இந்நோய்க் காரணி பல புற்களையும்தாக்கக் கூடியது. ஆகவே வயல்வெளிகளிலும், சுற்றுப்புறங்களிலும் இது போன்ற புற்கள் இல்லாமல் சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். நோய்த் தாக்கிய கதிர்களை அவ்வப்போது களைந்து எரித்து விட வேண்டும். பயிர்ச் சுழற்சி செய்ய வேண்டும்.

**விதை சிகிச்சை**

விதைகளை 20 சத உப்புக் கரைசலில் போட்டு நன்குக் கலக்க வேண்டும். மேலே மிதக்கும் இழை முடிச்சுக்கள் மற்றும் சேதமடைந்த தானியங்களை நீக்கி, அடியில் தங்கியிருக்கும் நல்ல விதைகளை இரண்டு, மூன்று முறை நல்ல தண்ணீரில் கழுவி நிழலில் உலர்த்திப் பின்னர் விதைக்க பயன்படுத்தவேண்டும்.






**மருந்து சிகிச்சை**

ஏக்கருக்கு சிரம் – 400 கிராம் அல்லது மான்கோசெப் – 400 கிராம் வீதம் 200 லிட்டர்தண்ணீரில் கலந்து கதிர் வெளிவரும் தருணத்தில் ஒரு முறையும் அதைத் தொடர்ந்து 1 – 2 முறை 5 – 7 நாட்கள் இடைவெளி விட்டு, கதிர்ப்பாகம் நன்கு நனையுமாறுத் தெளிக்க வேண்டும். பூக்கும் பருவத்தில் தொடர்ந்து மழைத்தூறல் காணப்பட்டால் 2 – 3 முறை குறுகிய இடைவெளியில் மருந்துத் தெளிக்க வேண்டும்.

கட்டுரையாளர்கள் : கு.விக்னேஷ், கோ.அர்ஷா மற்றும் கு.செல்வம், உதவிப் பேராசிரியர்கள், பாலாறு வேளாண்மைக் கல்லூரி, ஆம்பூர் – 635 805. தொடர்புக்கு : 82488 33079. மின்னஞ்சல் : lakshmikumar5472@gmail.com.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**